

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழு சார்பில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் விளையாட்டு மேம்பாட்டு அணி தொடங்கப்பட்டது முதல், அந்த அணி சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள், இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வமிக்கவர்களை கழகத்தின் ஆதரவாளர்களாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெடுப்புகள் குறித்து கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உறுப்பினர்கள் – அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு, விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கிய, சட்டமன்றத் தேர்தலுக்கான கழக தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவின் ஆலோசனைக் கூட்டத்தை அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற கழக தகவல் தொழில் நுட்ப நிர்வாகிகளின் பணிகளை, ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களுடன் இணைந்து ஆய்வு செய்தார். கடந்த 3 ஆண்டுகளில் ஐ.டி.விங் மேற்கொண்ட பணிகள் பற்றிய அறிக்கையை அளித்தார்கள். கழக அரசின் சாதனைகள் Social Mediaவில் கொண்டு சேர்க்கப்படும் விதம், கொள்கை எதிரிகளின் பொய்ப்புரட்டுகளுக்குப் பதிலடிக் கொடுப்பது உள்ளிட்டவை போன்ற அவர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து தேர்தலுக்கான திட்டங்களையும் கேட்டறிந்தார். 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றியைப்பெற சமூக வலைத்தளத்தில் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென ஆலோசனைகளை இக்குழு வழங்கியது. இதில் குழு உறுப்பினர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் அணிச் செயலாளர் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கவிஞர் மனுஷ்யபுத்திரன், கோவி.லெனின் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து!

# கழக பவள விழாவை ஆண்டு முழுவதும் நலஉதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

## திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

*திருவண்ணாமலை, அக். 5 -*

துணை முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தீர்மானமும், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் கழகத்தின் பவள விழாவினை, மக்களுக்கு பயன்தரும் வகையில் நலஉதவிகளுடன் ஆண்டு முழுவதும் கொண்டாடுவது என பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தீர்மானங்களை விளக்கி, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

02.10.2024 புதன்கிழமை மாலை 6.00மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.இராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப் பணி துறை அமைச்சருமான எ.வ.வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**இரங்கல் தீர்மானம்**

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், செய்யாறு நகரமன்றத் தலைவர் ஆ.மோகனவேல் தந்தை எம்.ஆனந்தன் அவர்களின் மறைவிற்கும், கழகத்தின் மூத்த முன்னோடி, மாவட்ட முன்னாள் பொருளாளர் ச.சி.பெருமாள் துணைவியார் பட்டம்மாள் அவர்களின் மறைவிற்கும் இந்த மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு துணை முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களை இந்த மாவட்டக் கழகம் வாழ்த்தி மகிழ்கிறது. அவருக்கு இந்த பொறுப்பை அளித்திட்ட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த மாவட்டக் கழகம் நன்றி தெரிவித்து மகிழ்கிறது.

தமிழக அமைச்சரவையில் ஆதிதிராவிடர் தோழர் சட்டமன்ற உறுப்பினர் கோவி.செழியன் அவர்களுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் பொறுப்பு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாவட்ட கழகம் நன்றித் தெரிவித்துக் கொள்கிறது.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் சேலம் இராஜேந்திரன் அவர்களுக்கு சுற்றுலாத் துறை அமைச்சராக பொறுப்பு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாவட்டக் கழகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா அமைத்திட இருக்கும் தமிழக அரசுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் பழனிவேல்தியாகராஜன், டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும், தொழில் வளர்ச்சியிலும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நமது மாவட்டத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் பொதுப்பணித் துறை அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும் இந்த மாவட்டக் கழகம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை, தேர்தல் ஆணையம் *29.10.2024* அன்று வெளியிடவுள்ளது. *29.10.2024* முதல் *28.11.2024* வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்களை நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர தலைமைச் தேர்தல் அலுவலரால் சனி, ஞாயிறு நாட்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

எனவே, மாவட்ட நிர்வாகிகள், பணிக்குழு நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஊர் கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, வாக்காளர் பட்டியல் சரிபார்த்தலை விரைந்து மேற்கொள்ள இந்த மாவட்ட கழகம் கேட்டுக் கொள்கிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் கழகத்தின் பவள விழாவை மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழகங்கள் மற்றும் அணி சார்ந்த அமைப்புகளின் சார்பிலும், மக்களுக்கு உதவிடும் வகையில், அவர்களுக்கு தேவையான நலஉதவிகளுடன் பொதுக்கூட்டங்கள், கொடியேற்று விழா மற்றும் கழக நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டும் என்றும், குறிப்பாக ஆதிதிராவிட சகோதர, சகோதரிகள் வசிக்கும் பகுதிகளில் அதிகளவு நிகழ்ச்சிகள் நடத்திட வேண்டுமென இந்த மாவட்ட கழகம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

செயற்குழுக் கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், ஆர்.வேல்முருகன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் க.லோகநாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதி சீனுவாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலி மணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக வடக்கு மாவட்ட துணை செயலாளர் ந.பாண்டுரங்கன் நன்றி கூறினார்.



நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில், தமிழக அரசின் தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக் அனைவரையும் வரவேற்றார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். திராவிட மணி நன்றி கூறினார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, அக்டோபர் 2, காந்தி ஜெயந்தியை முன்னிட்டு விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் ஒன்றியம், பொய்யப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் கோலியனூர் வட்டார வளர்ச்சி அலுவலர், கோலியனூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பி.தெய்வசிகாமணி, ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர் இரா.கேசவன், ஊராட்சி மன்ற தலைவர் சந்திரா சக்கரவர்த்தி, ஒன்றிய கவுன்சிலர் சாலை வசந்தி சந்திரசேகர், ஊராட்சி மன்ற துணை தலைவர் சத்தியராஜ், கிளைச் செயலாளர்கள் சக்கரவர்த்தி, சசிகுமார், பிரதிநிதி கே.ரமேஷ், ஐயனார், சிவகுரு, கண்ணன், வசுந்தராஜ், பால்ராஜ், பரசுராமன், பாலகிருஷ்ணன், தங்கராசு மற்றும் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.கழகத்தின் வெற்றி 2026லும் தொடர்வதை உறுதி செய்திட, கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக்குழுவை அமைத்தார்கள். அந்தக்குழுவின் சார்பில், ஒவ்வொரு அணிகளின் பணிகளையும் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகக் கழக சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகளின் பணிகளை நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இதில் கழக சுற்றுச்சூழல் அணி சார்பில் களத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கழக இளைஞர் அணிச்செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், குழு உறுப்பினர்கள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் கேட்டறிந்தனர். மேலும், சுற்றுச்சூழலைக் காப்பதற்காக, நம் திராவிட மாடல் அரசு முன்னெடுக்கும் திட்டங்களை அறிவுத்தளத்தில் மட்டுமன்றி அனைத்துத் தரப்பு பொதுமக்களிடமும் கொண்டு சேர்ப்பது பற்றி சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகள் விரிவாக எடுத்துக்கூறினர். 2026 தேர்தலுக்கானப் பணியைச் சுற்றுச்சூழல் அணியினர் சுற்றிச்சுழன்று மேற்கொள்ள வேண்டுமென ஆலோசனைகளை வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் அணி ச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, பூங்கோதை ஆலடி அருணா உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! நடிகர் பிரகாஷ்ராஜ் முன்னிலை!

# திருச்சி சிவா எம்.பி. நூல்கள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

## அமைச்சர் துரைமுருகன் – கவிப்பேரரசு வைரமுத்து – பேரா.சுப.வீரபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, அக். 4-

திருச்சி சிவா எம்.பி. நூல்கள் வெளியீட்டு விழா இன்று (5.10.2024 - சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார். திரைப்பட நடிகர் பிரகாஷ்ராஜ் விழாவிற்கு முன்னிலை வகிக்கிறார்.

இந்நூலின் முதல் பிரதியை கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பெற்றுக் கொள்கிறார்.

இவ்விழாவில் கவிப்பேரரசு வைரமுத்து, திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவரும், நூலாசிரியருமான திருச்சி சிவா எம்.பி. ஏற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கவிஞர் நெல்லை ஜெயந்தா தொகுத்து வழங்குகிறார்.

### செஞ்சி வட்டம் – ஆனாங்கூர் ஊராட்சியில்

# சாதிய பாகுபாடின்றி நிர்வாகம் நடைபெறுகிறது!

## மாவட்ட ஆட்சியர் விளக்கம்!

*விழுப்புரம், அக். 5-*

செஞ்சி வட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றியம் ஆனாங்கூர் ஊராட்சியில் சாதிய பாகுபாடின்றி நிர்வாகம் நடைபெற்று வருகிறது என்று விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரது செய்திக் குறிப்பு வருமாறு:-

*03.10.2024* அன்று சில நாளிதழ்கள் மற்றும் சில ஊடகங்களில், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆனாங்கூர் கிராம ஊராட்சித் தலைவர் தொடர்பான செய்தி வரப்பெற்றுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆனாங்கூர் கிராம ஊராட்சியில் கடந்த 2021ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தலில், பழங்குடியின இருளர் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றிபெற்று திருமதி. சங்கீதா க/பெ. ஏழுமலை, என்பவர் ஆனாங்கூர் கிராம ஊராட்சி மன்றத் தலைவராக செயல்பட்டு வருகிறார். பதவியேற்ற நாள் முதல் ஊராட்சி மன்றத் தலைவரின் தலைமையில் பல்வேறு கிராம சபைக்கூட்டங்கள் நடைபெற்றுள்ளது.

மேலும், கடந்த காலங்களில் சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய நாட்களில் ஊராட்சி மன்றத்தலைவர் கொடியேற்றி வைத்துள்ளார். இதற்கான புகைப்பட ஆதாரங்கள் இணைக்கப்பட்டுள்ளது. எவ்வித சாதிய பாகுபாடுகளும் இன்றி சமத்துவத்துடனே நிர்வாகம் நடைபெற்று வருகிறது. தற்போது ஊராட்சி மன்றத்தலைவர் அளித்த புகாரின் மீது விழுப்புரம் கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) அவர்களால் முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், ஆனாங்கூர் ஊராட்சிமன்றத்தலைவரால் காவல்துறையில் அளிக்கப்பட்ட புகாரின் மீது விசாரணை நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.



திருவாரூர் வருகை தந்த உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள், காட்டூரில் உள்ள கலைஞர் கோட்டம் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தாயார் அஞ்சுகத் தம்மையார் நினைவிடம் ஆகியவற்றிற்கு சென்று முத்தமிழ் அறிஞர் கலைஞர், தாயார் அஞ்சுகத்தம்மையார் ஆகியோர் படங்களுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, மாநில மாணவரணி துணை செயலாளர் மன்னை. த.சோழராஜன், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆடுதுறை உத்தராபதி, ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன், ஆர்.பாலச்சந்திரன்,சேகர் கலிய பெருமாள், புலிவலம் தேவா, நகர்மன்ற தலைவர்கள் புவனப்ரியா செந்தில், சோம. செந்தமிழ் செல்வன், பாத்திமா பஷீரா, நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ், மற்றும் கழக நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர் .